கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**OS No.156/2015**

The Oaths Act 1969 (Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 24.02.2026 நாளாகிய இன்று கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி திருமதி.E.Swetha, B.B.A., L.L.B.(Hons), அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| தேதி | 24.02.2026 | சாட்சி | பி.வா.சா.2 |
|---|---|---|---|
| பெயர் | முத்துகிருஷ்ணன் | வயது | 50 |
| தந்தை பெயர் | செல்வராசு | கிராமம் | சி.முட்லூர் |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி** :

4. மாதவபடையாட்சியை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். உயிருடன் இல்லை. அவர் எப்போது இறந்தார் என்றால் எனக்கு ஞாபகமில்லை. மாதவபடையாட்சிக்கு 03.05.1988 ல் தேதியில் இறந்தாரா என்றால் அதை என்னால் மறுக்கமுடியாது. மாதவபடையாட்சியின் மனைவி பெயர் மீனாட்சியா என்றால் எனக்கு தெரியாது. மாதவபடையாட்சிக்கும் அவரது மனைவிக்கும் ஜெயராமன், பூவாராசாமி. ராஜாமணியம்மாள் என்ற குழந்தைகள் உள்ளனர் என்றால் சரிதான். மாதவபடையாட்சியின் மகன் ஜெயராமன் மனைவி பெயர் கலியம்மாள் என்றால் சரிதான். கலியம்மாள் உயிருடன் உள்ளாரா என்றால் இறந்துவிட்டார். அவர் சுமார் 10 வருடம் முன்பே இறந்துவிட்டார். ஜெயராமனும் இறந்துவிட்டார் என்றால் சரிதான். ஜெயராமனுக்கு வாரிசு இல்லை என்றால் சரிதான். பூவாராசாமி திருமணம் ஆகாமல் சிறுவயதில் இறந்துவிட்டார் என்றால் சரிதான். ராஜாமணியம்மாள் கணவர் பெயர் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

5. எனது பிரமாணவாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளவாறு ராஜாமணி ஜெயராமன் என்பவரை திருமணம் செய்துகொண்டார் என்ற விவரத்தை நான் வழக்கறிஞரிடம் சொன்னேனா என்றால் ஞாபகமில்லை. ராஜாமணியம்மாளை நான்

பார்த்துள்ளேன் அவர் கணவரை நான் பார்த்ததில்லை. ராஜாமணியம்மாள் எப்போது இறந்தார் என்றால் எனக்கு தெரியாது. ராஜாமணியம்மாள் கணவர் ஜெயராமன் இல்லை கோவிந்தசாமி என்றால் அது எனக்கு தெரியாது. ராஜாமணியம்மாளுக்கு கணேசன் என்ற மகனும், சுலோச்சனா என்ற மகளும் உள்ளனர் என்றால் சரிதான். கணேசனின் மனைவி பெயர் உஷாராணி. சரிதான். கணேசன் இறந்துவிட்டார் என்றால் சரிதான். உஷாராணி தற்போது ஊரில் இல்லை என்பதால் அவரை பற்றி எனக்கு விவரம் தெரியாது. கணேசன் உஷாராணிக்கு கௌரி என்ற மகளும், சுரேஷ் என்கின்ற மணிவண்ணன் என்ற மகனும் உள்ளார்களா என்றால் சரிதான். அவர்கள் இருவரும் தற்போது சி.முட்லூர் கிராமத்தில் இல்லை என்பதால் அவர்களை பற்றி எனக்கு விவரம் தெரியாது.

6. கௌரிக்கு திருமணம் செய்துகொடுத்து கண்டமங்கலம் கிராமத்தில் வசித்து வருகிறார்கள் என்றால் எனக்கு தெரியாது. சுலோச்சனாயம்மாள் கணவர் பெயர் எனக்கு தெரியுமா என்றால் ஞாபகமில்லை. சுலோச்சனாயம்மாள் கணவர் நிரந்தரமாக எங்கு குடியிருந்தார் என்றால் அவர் திருமணம் செய்து கொண்டு அப்போதே வெளிநாட்டிற்கு சென்று விட்டார். சுலோச்சனாயம்மாள் இங்குதான் வசித்து வந்தார். சுலோச்சனாயம்மாளின் கணவர் எந்த ஊர்க்காரரர் என்றால் சி.முட்லூர் கிராமம்தான். சுலோச்சனாயம்மாளின் கணவரின் உடன் பிறந்தவர்கள் ஒருவர் அவர் ஜெயராமன் (சாட்சி தற்போது சுலோச்சனாயம்மாளின் கணவர் பெயர் பூவராகவன் என்று குறிப்பிட்டார்). தற்போது ஜெயராமன் மற்றும் பூவராகவன் இறந்துவிட்டார்கள். சுலோச்சனாயம்மா பூவராகனுக்கு குழந்தைகள் இல்லை என்றால் சரிதான்.

7. பூவராகவன், ஜெயராமன் எங்கு இறந்தார்கள் என்றால் சி.முட்லூர் கிராமத்தில் இறந்தார். அதற்கான இறப்பு சான்றிதழ் என்னிடம் உள்ளதா என்றால் இல்லை. என்னுடைய தொழில் விவசாயம் என்றால் சரிதான். என்னுடைய பெயரில் சொத்துகள் எதாவது உள்ளதா என்றால் இல்லை. எனது மனைவி நர்மதா பெயரில்

சொத்து எதாவது உள்ளதா என்றால் இல்லை. நான் அரசு கலைக்கல்லூரி எதிரில் உள்ள அரசு புறம்போக்கு இடத்தில் குடியிருக்கிறேன் என்றால் சரிதான். எனது பெயரில் வங்கி கணக்கு உள்ளதா என்றால் இல்லை. எனது மனைவி பெயரில் வங்கிகணக்கு உள்ளது. எனது மனைவி வங்கிகணக்கு எப்போது தொடங்கப்பட்டது என்றால் சுமார் 10 வருடங்களுக்கு முன்னால். அதில் அதிகபட்ச தொகை எவ்வளவு இருந்தது என்றால் சுமார் 2 முதல் 3 லட்சம், அவை தற்போது வங்கியில் இல்லை. எப்போது வங்கியில் இருந்து பணம் எடுக்கப்பட்டது என்றால் சுமார் 7. 8 வருடங்களுக்கு முன்னால். 7, 8 வருடங்களுக்கு முன்னால் என்ன காரணத்திற்காக பணம் எடுத்தேன் என்றால் வழக்கு சொத்து இடத்தை வாங்குவதற்காக எடுத்தேன்.

8. எனது மனைவி வங்கி கணக்கில் இருந்து பணத்தை எடுத்துதான் சுலோச்சனாயம்மாளிடம் கொடுத்தேன் என்றால் சரிதான். சுலோச்சனாயம்மாளிடம் காசோலையாக கொடுத்தேனா அல்லது ரொக்கமாக கொடுத்தேனா என்றால் ரொக்கமாகத்தான் கொடுத்தேன். எனது மனைவி பெயரில் உள்ள வங்கி கணக்கில் இருந்து கொடுத்தேன் என்பதை காட்டக்கூடிய ஆதாரம் என்னிடம் உள்ளது. பொதுவாக இடத்தை வாங்கும் போது காசோலை மற்றும் டிராப்ட் மூலமாகத்தான் கொடுக்க வேண்டும் என்ற சட்ட விதிமுறை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்தை எப்போது கிரயம் வாங்கினேன் என்றால் 26.06.2015 தேதியில் வாங்கினேன். அப்போது வழக்கு சொத்தின் சந்தை மதிப்பு என்னவென்றால் எனக்கு ஞாபகமில்லை. எவ்வளவு தொகைக்கு வழக்கு சொத்தை வாங்கினேன் என்றால் 1 செண்ட் 60 ஆயிரத்திற்கு மொத்தம் 5 செண்ட் வாங்கினேன். அதற்கு 3 லட்சம் கொடுத்தேன். கிரயத்திற்கு அரசு முத்திரை தாள் எவ்வளவு ரூபாய்க்கு வாங்கினேன் என்றால் ஞாபகமில்லை.

9. வழக்கு சொத்திற்கு நான்கெல்லையில் யார் யார் உள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கு வடக்கால் யார் உள்ளார் என்றால் கிருஷ்ணமூர்த்தியின் வீடு. தெற்கால் வீரராகவனின் காலி மனை, மேற்கு

ரோடு, கிழக்கால் ஜெணார்த்தணனின் ரைஸ் மில் உள்ளது. வழக்கு சொத்திற்கு அருகில் மாதவபடையாட்சிகு வேறு நிலம் உள்ளதா என்றால் உள்ளது. அது 5 செண்டிட்ற்கு வடக்கால் உள்ளது. வழக்கு சொத்து தென்புறத்திற்கு அடுத்த தென்புறம் யார் உள்ளார் என்றால் தெரியாது. வழக்கு சொத்து தென்புறத்தில் தியாகராஜனின் வீடு உள்ளதா என்றால் இல்லை. வழக்கு சொத்திற்கு தென்புறம் வீரராகவனுக்கு பாத்தியமான இடத்தில் தியாகராஜன் கொட்டகை போட்டுள்ளார் அதில் வீடு இல்லை. தியாகராஜன் அந்த இடத்தில் எதன் அடிப்படையில் கொட்டகை அமைத்தார் என்றால் போக்கியம் வாங்கியுள்ளார் என்று பேசிக்கொண்டார்கள். சொத்தில் மரங்கள் எதாவது உள்ளதா என்றால் உள்ளது. எந்தெந்த மரங்கள் உள்ளது என்றால் நான்கு தென்னை மரம், மூன்று வேப்பமரம். வாழைக்கண்ணு, புல் உள்ளது. புல் மாட்டு தீவனத்திற்காக வளர்க்கப்படுகிறது என்றால் சரிதான். அது சுமார் ஒரு அடி வளர்ந்துள்ளது.

10. வழக்கு சொத்தில் மாமரம், பூவரச மரம் இரண்டு, சப்போட்டா மரம் ஒன்று, சவுந்தை மரம் உள்ளது என்றால் மேற்சொன்ன அனைத்து மரங்களும் சிறு கண்ணாகத்தான் உள்ளது, மரம் கிடையாது. வழக்கு சொத்து தென்புறம் தியாகராஜன் வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்து தற்போது என்னுடைய அனுபவத்தில் உள்ளது என்றால் சரிதான். எந்த ஆண்டில் இருந்து என்னுடைய அனுபவத்தில் உள்ளது என்றால் கிரயம் வாங்கிய ஆண்டில் இருந்து என் அனுபவத்தில் உள்ளது.

11. பட்டாவை என் பெயரில் மாற்றியுள்ளேனா என்றால் மாற்ற மனு கொடுத்துள்ளேன் இன்று வரை மாறவில்லை. எப்போது மனு கொடுத்தேன் என்றால் வழக்கு தாக்கல் செய்வதற்கு ஒரு வாரம் முன்பு வழக்கு சொத்தை நான் அனுபவித்து வருகிறேன் என்பதை காட்டுவதற்கு எதாவது ஆதாரம் என்னிடம் உள்ளதா என்றால் இல்லை. நான் கிரயம் வாங்குவதற்கு முன்பாக வழக்கு சொத்தில் மரங்கள் எதாவது

உள்ளதா என்றால் நான் வாங்கிய பிறகுதான் மரக்கன்றுகளை வைத்தேன். கிரயம் வாங்கும் போது வழக்கு சொத்தில் எந்த மரங்களும் கிடையாது. வழக்கு சொத்தை எதற்காக கிரயம் வாங்கினேன் என்றால் வீடு கட்டுவதற்காக கிரயம் வாங்கி ஏன் இன்று வரை வீடு கட்டவில்லை என்றால் எனக்கு ஏற்கனவே ஒரு வீடு உள்ளது என்பதால் பொறுமையாக வழக்கு சொத்தில் வீடு கட்டிகொள்ளளாம் என்று நினைத்தேன். நான் ஒரு அரசியல் கட்சியில் உறுப்பினராக உள்ளேன் என்றால் சரிதான்.

12. தியாகராஜனை எனக்கு எவ்வளவு ஆண்டுகளாக தெரியும் என்றால் திருமணம் ஆன காலத்தில் இருந்து தெரியும். தியாகராஜன் கந்தன்குமாரன் கிராமத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். தியாகராஜன் திருமணம் ஆகி மனைவியுடன் சி.முட்லூர் கிராமத்தில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். எனக்கு அவருக்கும் எனக்கும் நெருக்கிய பழக்கம் இல்லை என்றால் சரிதான்.

13. நான் என் மனைவி இருவரும் விவசாயம் கூலி வேலை செய்து வருகிறோம் என்றால் சரிதான். அது தான் எங்கள் வாழ்வாதாரம் என்றாலும் சரிதான். என்னுடைய மாமனார் பெயர் சந்திரசேகர். சந்திரசேகர் மகன் தான் ராமன் என்றால் சரிதான். லோகநாதன் மகன் தேவராசு எனக்கு நண்பர் என்றால் சரிதான். பி.முட்லூர் கிராமத்தை சேர்ந்த ராமசந்திர படையாட்சி மகன் ஜெயபால் தெரியுமா என்றால் தெரியாது. பரங்கிபேட்டை சேர்ந்த உலகநாதன் மகன் பிச்சாவரம் என்பவரை தெரியுமா என்றால் தெரியாது.

14. வா.சா.ஆ.3 கிரய ஆவணத்தின் அசல் ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் அந்த ஆவணத்தில் பேரில் நான் கடன் வாங்கியுள்ளேன். யாரிடம் கடன் வாங்கியுள்ளேன் என்றால் சி.முட்லூர் கிராமத்தை சேர்ந்த தியாகராஜன் என்பவரிடம் அவரிடம் தான் அசல் ஆவணம் உள்ளது. என்ன பத்திரம் எழுதி கடன் வாங்கினேன் என்றால் பத்திரம் எதுவும் எழுதவில்லை ஆனால் அசல் கிரைய ஆவணம் கொடுத்து 2 வருட காலகெடு என்று வாய்மொழி ஒப்பந்தம் செய்துகொண்டோம். எவ்வளவு

தொகை கடன் வாங்கினேன் என்றால் ரூ.40,000/-அதற்கு வட்டி இல்லை.

15. தியாகராஜன் என்ன தொழில் செய்கிறார் என்றால் எந்த தொழிலும் செய்யவில்லை. வட்டி வியாபாரம் செய்து வருகிறாரா என்றால் இல்லை. தியாகராஜனுக்கு சொத்து உள்ளதா என்றால் உள்ளது. 1 காணி நிலம். அதன் சர்வே எண். விஸ்திரணம் தெரியுமா என்றால் தெரியாது. தியாகராஜனுக்கு குடும்பம் உள்ளதா என்றால் உள்ளது அவர் எங்கு குடியிருக்கிறார் என்றால் சி.முட்லூரில் மணவெளி தெருவில் வசித்து வருகிறார். தியாகராஜன் எனக்கு நெருங்கிய நண்பர் என்றால் சரிதான். எனது தகப்பனார் செல்வராசின் சகோதரி மகளை தான் நான் திருமணம் செய்துக்கொண்டேன் என்றால் சரிதான்.

16. தியாகராஜன் மற்றும் சுலோச்சனா எழுதிக்கொண்ட கிரய ஒப்பந்த்தை நான் பார்த்தேனா என்றால் இதுநாள் வரை பார்த்தது இல்லை. அந்த கிரய ஒப்பந்தத்தில் எழுதியுள்ள விவரங்களும் எனக்கு தெரியாது என்றால் சரிதான், கிரய ஒப்பந்தத்தல் சாட்சி கையெழுத்து போட்ட நபர்களை எனக்கு தெரியாது என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்தின் பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் மாதவ படையாட்சி பெயரில் உள்ளது. நான் கிரயம் வாங்குவதற்கு முன்பாக வழக்கு சொத்திற்கு வில்லங்கம் போட்டு பார்த்தேனா என்றால் பார்த்தேன் அதன் நகல் என்னிடம் உள்ளது.

17. வழக்கு சொத்து வாங்குவதற்கு முன்பாக கிராம நிர்வாக அதிகாரியிடம் வழக்கு சொத்து குறித்த உரிமை பற்றி விசாரித்தேனா என்றால் விசாரித்தேன் அப்போது அவர் வழக்கு சொத்து மாதவ படையாட்சி பெயரில் உள்ளதாக கூறினார். அதன் அனுபவம் சுலோச்சனாவிடம் இருப்பதாக சொன்னார். சுலோச்சனாவிடம் அனுபவம் இருப்பதாக சொன்னதற்கு ஆவணம் எதாவது வாங்கினேனா என்றால் இல்லை. நான் கிரயம் வாங்கிய பிறகு எப்போது எனக்கு கிரய ஒப்பந்தம் பற்றி தெரியவந்தது என்றால் சுமார் ஒரு மாதம் கழித்து. அதன்பின்னிட்டு தியாகராஜனிடம் சென்று விசாரித்தேனா என்றால் இல்லை.

18. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக எனக்கும் தியாகராஜனுக்கும்

எந்தவித முன்விரோதமும் இல்லை என்றால் சரிதான். தியாகராஜனிடம் நேரடியாக சென்று கிரய ஒப்பந்தத்தை பற்றி கேட்காததற்கு என்ன காரணம் என்றால் காரணம் எதுவும் இல்லை. சுலோச்சனாவிடம் நேரடியாக சென்று கிரய ஒப்பந்தத்தை பற்றி கேட்டேனா என்றால் இல்லை. சுலோச்சனாவிடம் கிரய ஒப்பந்தத்தை காண்பிக்குமாறு கேட்டேனா என்றால் இல்லை. சுலோச்சனா கிரய ஒப்பந்தத்தை என்னிடம் காண்பித்தாரா என்றால் இல்லை, அவ்வாறு எந்த ஒரு கிரய ஒப்பந்தமும் அவர் போடவில்லை என்று கூறினார். கிரய ஒப்பந்தம் பற்றி சுமார் ஒரு மாதம் கழித்து தெரியவந்தது என்று சொல்லியநிலையில் எவ்வாறு எனக்கு தெரியவந்தது என்றால் தியாகராஜன் என் மீது தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.156/2015 மூலம் தெரியும்.

19. அதன் பிறகு சுலோச்சனாவிடம் சென்று அந்த வழக்கை பற்றி கேட்டேனா என்றால் கேட்டேன் அதற்கு அவர் பதில் எதுவும் சொல்லவில்லை. வழக்கு சொத்தில் பிரச்சனை இருப்பதால் கிரய பணத்தை திருப்பி கொடுக்கிறேன் என்றும் கிரயத்தை மீண்டும் பெற்றுக்கொள்ளவும் சுலோச்சனாவிடம் சொன்னேனா என்றால் இல்லை. என் வாழ்கையில் முதன் முதலில் நான் வாங்கிய சொத்து வழக்கு சொத்து தான் என்றால் சரிதான். சுலோச்சனாவிடம் கிரய தொகையை மீண்டும் கேட்காததற்கு காரணம் எதுவும் உள்ளதா என்றால் இல்லை. இது நாள் வரை கிரய ஒப்பந்தம் படித்து பார்க்காததற்கு என்ன காரணம் என்றால் காரணம் எதுவும் இல்லை.

20. முட்லூரில் கிராமத்தில் ரகுராமன் மகன் ரமேஷ் தெரியுமா என்றால் தெரியும். ரமேஷ் தற்போது உயிருடன் இல்லை. ரமேஷ் என்ன தொழில் செய்து வந்தார் என்றால் தொழில் எதுவும் இல்லை சொத்து இருந்ததா என்றால் இருந்தது. சொந்த வீடும் இருந்தது. முட்லூரில் பழனி மகன் சச்சிதாநந்தம் இருந்தாரா என்றால் இருந்தார். அவருக்கும் எனக்கும் விரோதம் எதுவும் இல்லை என்றால் சரிதான். சச்சிதானத்திற்கு என்ன தொழில் என்றால் டீ கடை வைத்திருந்தார். பரங்கிபேட்டையில் பக்கிரிசாமி என்ற வழக்கறிஞரை தெரியுமா என்றால் தெரியாது. என் பெயரில் குற்றவியல் வழக்கு CC.no.129/2019 வழக்கு தாக்கல் செய்யப்பட்டதா

என்றால் இல்லை.

21. எனது தேவராஜன் பெயரில் நான்கு குற்றவியல் வழக்குகள் உள்ளதா என்றால் இல்லை. என் ஊரில் ராஜாராமன், ராமதாஸ் ஆகியோர்கள் தியாகராஜன் அவர் மனைவி மற்றும் மாமியார் பெயரில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். அந்த வழக்கு தியாகராஜனுக்கு ஆதரவாக முடிந்தது என்றால் இல்லை வழக்கில் சமரசம் பேசபட்டு தீர்த்துக்கொள்ளப்பட்டது. என் ஊரில் சீமான் என்பவர் உள்ளாரா என்றால் இருக்கிறார். சீமான் தியாகராஜன் பெயரில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான், அந்த வழக்கு தியாகராஜனுக்கு ஆதரவாக தீர்ப்பாகியுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சுலோச்சனாவின் சகோதரர் கணேசன் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். கணேசன் மனைவி உஷாராணி, மகன் மணிவண்ணன் என்றால் சரிதான். கணேசன் மகள் கெளரி என்றால் எனக்கு தெரியாது.

22. உஷாராணி மற்றும் மணிவண்ணன் சுலோச்சனா பெயரில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு எண் தெரியுமா என்றால் தெரியாது. உஷாராணி மற்றும் மணிவண்ணன் தேவராஜன் மற்றும் சுலோச்சனா பெயரில் தங்களுடைய சொத்தை ஆக்கிரமித்ததாக வழக்கு தாக்கல் செய்துள்ளனர் என்றால் எனக்கு தெரியாது. உஷாராணி மற்றும் மணிவண்ணன் ஆகியோர் மாதவ படையாட்சியின் சில சொத்துக்களை அனுபவித்து வருகிறார்கள் என்றால் மாதவ படையாட்சியின் எந்த ஒரு சொத்தையும் அவர்கள் அனுபவிக்கவில்லை. உஷாராணி மற்றும் மணிவண்ணன் எங்கு குடியிருக்கிறார்கள் என்றால் எனக்கு தெரியாது.

23. நான் கிரயம் வாங்கும்போது வழக்கு சொத்தின் சந்தை மதிப்பு எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ.3 ஆவணத்தில் சந்தை மதிப்பு ரூ. 4.36,000/- என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பொதுவாக guideline மதிப்பை விட சந்தை மதிப்பு அதிகமாக இருக்கும் என்றால் சரிதான். ரூ.4.36,000/-சொத்தை எதற்காக எனக்கு ரூ.3,00,000/-திற்கு கிரயம் கொடுத்தார் என்றால் காரணம் எதுவும் இல்லை. அன்றைய தினமே ரூ.3,00,000/-த்தை சுலோச்சனாவிடம்

கொடுத்துவிட்டேன் என்றால் சரிதான். கிரய சொத்தை எந்த தேதியில் ஒப்புதல் எடுத்துக்கொண்டேன் என்றால் வாங்கிய அன்றைய தினமே.

24. வா.சா.ஆ.3 ஆவணம் தியாகராஜனை ஏமாற்றும் நோக்கத்தோடு நானும் சுலோச்சனாவும் தயார் செய்த போலி ஆவணம் என்றால் இல்லை. நான் ரூ.3,00,000/- சுலோச்சனாவிடம் கொடுத்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் ரூ.3,00,000/-ஏற்பாடு செய்ய எனக்கு போதிய வசதி இல்லை என்றாலும் சரியல்ல. அசல் வழக்கு எண்.156/2015 என்ற வழக்கில் நான் தரப்பினராக உள்ளேன் என்றால் சரிதான். அந்த அசல் வழக்கு எண்.156/2015 நடந்துகொண்டிருக்கும் போது இந்த புதிய வழக்கை தாக்கல் செய்ய என்ன காரணம் என்றால் வழக்கு சொத்து எனக்கானது என்பதற்காக.

25. இந்த வழக்கை எந்த அவசியத்திற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் தெரியாது. இந்த வழக்குரையில் அசல் வழக்கு எண்.156/2015 வழக்கை பற்றி சொல்லியுள்ளேனா என்றால் இல்லை, அசல் வழக்கு எண்.156/2015 வழக்கை பற்றி சொல்லாததற்கு காரணம் எதுவும் உள்ளதா என்றால் இல்லை. நீதிமன்றத்தை ஏமாற்றும் நோக்கத்தோடு தான் பழைய வழக்கை பற்றி சொல்லாமல் இந்த வழக்கை தாக்கல் செய்து உத்தரவு பெற நினைக்கிறேன் என்றால் இல்லை. இந்த வழக்கில் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

மேற்கண்ட சாட்சியங்களை நான் அசல் வழக்கு எண்.14/2016 லும் அளித்துள்ளேன் என்றால் சரிதான்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

(Sd/- E.Swetha)
Additional District Munsif
Chidambaram